தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022
Conducted by Field Work Centre, Thondaimanaru
5th Term Examination - 2022

FWC

வணிகக்கல்வி - I Business Studies - I	Two Hours Gr. 13 (2022)	32	T	I

அறிவுறுத்தல்கள்
- எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தளிலேயே விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில உமது சுட்டெண்ணை தெளிவாக எழுதுக.
- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

சுட்டெண் :…………………..……

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

வினா இல.	புள்ளிகள்
01 – 30	
31 – 50	
மொத்தம்	

01. க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்கும் கீர்த்தி நாட்டில் நிலவும் தற்போதைய சூழலில் தடைப்படும் தனது பாடசாலைக் கல்வியை ஈடு செய்யும் பொருட்டு, பாடம் தொடர்பான விடயங்களை முன்வைக்கும் இணையத்தளம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி மேலதிக அறிவினைப் பெற்றுக் கொண்டார். இங்கு கல்வி என்ற தேவை மற்றும் விருப்பங்களை பூர்த்தி செய்ய பயன்படுத்தப்படும் எந்தவொன்றையும் கருதுவது.

(1) பொருட்கள் ஆகும். (2) சேவைகள் ஆகும். (3) உற்பத்தி (Product) ஆகும்
(4) வளங்கள் ஆகும். (5) சந்தையாகும்

(………)

02. கடந்த சில மாதங்களாக இலங்கையில் மின்சார விநியோகம் குறிப்பிட்ட சில மணித்தியாலயங்களுக்கு துண்டிக்கப்பட்டு வருகின்றது. மின்சாரம் உள்ளடங்கும் தொகுதியாக இருப்பது.
1. முதனிலை, விவசாயத்துறை
2. இரண்டாம் நிலை, சேவைத்துறை
3. மூன்றாம் நிலை, சேவைத்துறை
4. மூன்றாம் நிலை, கைத்தொழில் துறை
5. இரண்டாம் நிலை, கைத்தொழில் துறை (………)

03. வணிகத்தின் வளர்ச்சியும் அதனுடன் தொடர்புடைய உள்ளீடுகளும் கீழே தரப்பட்டுள்ளன.
A. நேர் உற்பத்தியில் வணிகங்களைக் காண முடியாது.
B. நேரில் உற்பத்தியின் போது மேலதிக உற்பத்தியினைக் காண முடியும்.
C. உழைப்புப் பகிர்வானது சிறக்குமியல்பு ஒன்றின் பெறுபேறாகும்.
D. நேர் உற்பத்தி காரணமாக வியாபாரம் தோன்றியது.

இவற்றுள் சரியான கூற்றாக இருப்பது.

(1) A மட்டும்
(2) A யும், B யும் மட்டும்
(3) A யும், D யும் மட்டும்
(4) B யும், C யும் மட்டும்
(5) C யும், D யும் மட்டும் (………)

04. வரையறுத்த ரெலிக்கொம் கம்பனியை வணிகங்களை வகைப்படுத்தும் நியதிகளுக்கமைய வகைப்படுத்தும் போது சரியான நியதிகளைக் காட்டும் விடையாக அமைவது..

	உற்பத்தியின் தன்மை			உரிமை அடிப்படை		நோக்க அடிப்படை	
	1ம் நிலை	2ம் நிலை	3ம் நிலை	தனியார் துறை	பொது/ அரசதுறை	இலாப நோக்கம்	இலாப நோக்கற்ற
(1)		✓		✓		✓	
(2)	✓				✓		✓
(3)			✓		✓		✓
(4)			✓		✓	✓	
(5)			✓	✓			✓

(………)

05. வணிகக்கருமங்கள் சில ‘x’ நிரலிலும் அவற்றிற்கான உதாரணங்கள் ‘y’ நிரலிலும் காட்டப்பட்டுள்ளது..

x	y
1. நிர்வாகம்	A. இழிவுக் கிரய முறையைத் தேடியறிதல்
2. சந்தைப்படுத்தல்	B. மூலதனத்தை ஈடுபடுத்தல்
3. நிதி	C. வருகை அட்டவணையைப் பேணல்
4. ஆராய்ச்சி, அபிவிருத்தி	D. பதவியுயர்வு வழங்கல்
5. மனித வளம்	E. விலையினைத் தீர்மானித்தல

x க்கும் y நிரல்களைப் பொருத்தும் போது உள்ள சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

(1) C, E, B, D, A　　(2) C, E, B, A, D
(3) E, B, C, A, D　　(4) E, B, D, C, A
(5) B, E, A, C, D　　(………)

06. கீழே தரப்பட்ட சூழல் காரணிகளில் பொருளாதாரச் சூழல்க் காரணிகளை மட்டும் இனங்காட்டும் விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

(1) தனிநபர் நம்பிக்கைகள், பெறுமானங்கள், பழக்க வழக்கங்கள், சமய நம்பிக்கைகள்
(2) சனத்தொகை அளவு, பல்லின சமூக அமைப்பு, வயது மட்டம், மனை அமைப்பு
(3) கால நிலை வானிலை மாற்றங்கள், புவி அமைவிடம், வளங்களைக் கண்டுபிடித்தல்
(4) திறந்த பொருளாதாரக் கொள்கை, வரவு செலவுத் திட்டக் கொள்கை, விதிகள், பிரமாணங்கள்
(5) மொத்த தேசிய உற்பத்தி, வேலைவாய்ப்பு, சேமிப்பு, முதலீடு　(………)

07. நிலைபேறான அபிவிருத்திக்கு வணிகங்களின் பங்களிப்புக்கள் சில கீழே தரப்படுகின்றன.

A. பூரண வேலைவாய்ப்பு
B. இடர் முகாமைத்துவம்
C. சர்வதேச வியாபாரம்
D. மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தல்.
E. வளப்பயன்பாடு
F. வறுமை நிலையை இழிவுபடுத்தல்.
G. மனித மூலதனத்தைப் பராமரித்தல்.

மேற்குறிப்பிட்டவற்றுள் சமூக கலாசார நிலைபேறான தன்மைக்கு வணிகங்களின் பங்களிப்பினை குறித்து நிற்கும் எழுத்துக்களாக அமைவது

(1) D, F, G　　(2) A, B, E　　(3) C, D, E
(4) E, F, G　　(5) B, C, D　　(………)

08. பின்வரும் செலவுகளில் அரசின் மூலதனச் செலவாகக் கருதப்பட முடியாதது
(1) வீதி நிர்மாணம்
(2) பாலங்கள் நிர்மாணம்
(3) தொலைத் தொடர்பு கோபுரம் அமைத்தல்
(4) சம்பளமும் கூலியும்
(5) துறைமுக அபிவிருத்தி (………)

09. வணிக அமைப்புக்களின் பெயர்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A. தேனுகா பல்பொருள் களஞ்சியம்
B. முத்து அன் கோ
C. வரையறுக்கப்பட்ட லங்கா கிளியறிங் (PVT) கம்பனி
D. வரையறுக்கப்பட்ட செலிங்கோ கம்பனி

மேற்குறிப்பிட்டவற்றுள் இலாபம் பெறும் நோக்கம் கொண்டதும், தனியார் துறைக்குட்பட்டதும், சட்டரீதியான தனிமனித அந்தஸ்து அற்றதுமான வணிக அமைப்புக்களை இனங்காட்டும் எழுத்துக்களாக இருப்பது
(1) A, B (2) B, C (3) B, D (4) C, D (5) A, D (………)

10. பின்வருவனவற்றுள் அரச திணைக்களம் ஒன்றின் பண்பாகக் கருதப்பட முடியாதது.
(1) அமைச்சொன்றின் கீழ் அரசின் நேரடிக் கண்காணிப்புடையதாகும்.
(2) பெரும்பாலும் சேவை வழங்கும் நிறுவனமாகக் காணப்படல்.
(3) அரசின் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் தேவையான நிதியினைப் பெற்றுக் கொள்ளல்.
(4) சட்டரீதியான தனிமனித அந்தஸ்துக் காணப்படல்.
(5) தாபனக் கோவை, நிதிப்பிரமாணம் போன்ற அரச கொள்கைக்கமைய கருமமாற்றுதல்
(………)

11. சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகங்களை ஊக்குவிப்பதற்கு அரசு மேற்கொண்டு வரும் நிதி சார்ந்த ஊக்குவிப்பாக அமைவது.
(1) ஆலோசனைச் சேவை
(2) ஆய்வும் தொழில் நுட்ப சேவைகள்
(3) உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்
(4) வரிச் சலுகை
(5) சந்தை வசதி வழங்கல்/ விற்பனை வசதிகள் (………)

12. மலரவன் என்பவர் பாதணிகள் விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபடும் மொத்த வியாபாரி ஆவார். முகமட் என்பவர் அவரிடமிருந்து ரூபா 100000 பெறுமதியான ஆடை அணிகளை கொள்வனவு செய்ததுடன் ரூபா 60000 த்தை உடனடியாகச் செலுத்தினார். மிகுதிப் பணத்தை இரு மாதங்களில் செலுத்துவதற்கு உடன்பட்டார்.
கீழே காட்டப்பட்டுள்ள பணத்தின் தொழிற்பாடுகளில் மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சியுடன் தொடர்புடைய பணத்தின் தொழிற்பாடுகளை மாத்திரம் உள்ளடக்கிய விடையினைத் தெரிவு செய்க.
A. பரிமாற்றூடகமாகும்.
B. பெறுமான அளவு கோலாகும்.
C. பெறுமானத் திரட்டாகும்.
D. பிற்போடப்பட்ட கொடுப்பனவு சாதனமாகும்
(1) A, B, D (2) A, B, C (3) B, C, D
(4) A, C, D (5) A, B (………)

13. மத்திய வங்கியின் பிரதிநிதித்துவத் தொழிற்பாடு ஒன்றாகக் கருதப்பட முடியாதது.
(1) சட்டப்பணத்தினை வெளியிடலும், வழங்கலும்
(2) அரசின் கடன் முகாமைத்துவம்
(3) வெளிநாட்டு நாணயக் கட்டுப்பாடு
(4) ஊழியர் சேமலாப நிதியனை முகாமை செய்தல்
(5) சிறியளவிலான நிதியீட்டல் வேலைத் திட்டங்களுக்குத் தலைமை நிறுவனமாகத் தொழிற்படல்.
(………)

14. பின்வருவனவற்றுள் சிறப்புக் கோடிடலாக ஏற்றுக் கொள்ளக் கூடியது

(1) காசோலையின் முகப்பில் இரு சமாந்தரக் கோடுகளுடன் "கைமாற்றத் தகாதது" என எழுதுதல்.
(2) சாமாந்திரமான கோடுகளின்றி காசோலையின் முகப்பில் வங்கியொன்றின் பெயரை எழுதுதல்.
(3) சமாந்திரக் கோடுகளின்றி காசோலையின் முகப்பில் "கைமாற்றத் தகாதது" எனும் பதத்தை எழுதுதல்.
(4) சமாந்திரக் கோடுகளினுள் "பெறுவோன் கணக்கு மட்டும்" என எழுதுதல்.
(5) காசோலையின் முகப்பில் சமாந்திரமான இரு கோடுகள் மாத்திரம் வரைதல். (………)

15. ரூ 1500000 காப்புறுதி செய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்று ஏற்பட்ட தீடீர் விபத்தினால் முழுமையாக அழிவுற்றதனால் காப்புறுதி நிறுவனம் இழப்பீடாக ரூ 1500000 செலுத்தியதுடன் மோட்டாரின் எஞ்சிய கழிவுப் பொருட்களை காப்புறுதி நிறுவனம் தனக்கு உரிமையாக்கிக் கொண்டது. இதற்கு காரணமாக அமையும் காப்புறுதித் தத்துவம்.

(1) காப்புறுதி செய்யும் உரிமை (2) உச்ச நம்பிக்கை (3) இழப்பீட்டுத் தத்துவம்
(4) பங்களிப்புத் தத்துவம் (5) பதிலாள் வைப்புத் தத்துவம் (………)

16. பின்வருவன போக்குவரத்து முறைகள் சிலவற்றின் அனுகூலங்களும், பிரதிகூலங்களும் சிலவாகும்.

A. தேவைக்கேற்ப ஊடகமொன்றை தெரிவு செய்ய முடிதல்.
B. தேவைப்படும் எல்லாச் சந்தர்ப்பத்திலும் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியாது.
C. போக்குவரத்திற்கு கூடுதல் காலம் எடுத்தல்.
D. வீதி பராமரிப்புச் செலவு இல்லை.
E. அனேகமாக பயணம் முடியும் வரையிலும் ஒரே ஊடகத்தைப் பயன்படுத்த முடியுமாக இருத்தல்.
F. நாடு முழுவதும் பரம்பிக் காணப்படாமை.
G. போக்குவரத்திற்கான கிரயம் உயர்வாகக் காணப்படல்
H. விரைவாக அழிவுறும் பொருட்களுக்கு பொருத்தமானது

மேற்குறிப்பிட்டவற்றுள் புகையிரதப் போக்குவரத்தின் பிரதிகூலமான பண்புகளையும், தெருப் போக்குவரத்தின் அனுகூலமான பண்புகளையும் எடுத்துக் காட்டும் விடையாக அமைவது.

	புகையிரதப் போக்குவரத்து பிரதிகூலங்கள்	தெருப் போக்குவரத்து அனுகூலங்கள்
(1)	C, F	A, D
(2)	C, G	D, E
(3)	B, F	A, E
(4)	F, G	D,H
(5)	B,C	E,H

(………)

17. சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் சில ஆவணங்கள் தொடர்பான கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.

A. பொருட்கள் கப்பலுக்கு பொறுப்பேற்கப்பட்டமைக்காக வழங்கப்படுவது சுமைச்சீட்டு ஆகும்.
B. ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்தி செய்யப்பட்ட நாட்டின் பெயரை உறுதிப்படுத்துவது பட்டியல் ஆகும்.
C. விலை, தொகை, மொத்தப் பெறுமதி, ஏற்றுமதியாளர் பெயர் ஆகிய விபரங்களை உள்ளடக்கித் தயாரிக்கப்படுவது பட்டியல்/ இன்வொய்ஸ் ஆகும்.
D. ஏற்றுமதி பொருட்கள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கி ஏற்றுமதியாளரால் சுங்கத்திற்கு சமர்ப்பிப்பது ஏற்றுமதி குறிப்பு ஆகும்.
E. விவசாய உற்பத்திப் பொருட்களின் பாவனைப் பொருத்தப்பாட்டினை உறுதிப்படுத்தி அந்நாட்டினுள் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுவது தோற்றுவாய் சான்றிதழ் ஆகும்.

மேற்குறிப்பிட்ட கூற்றுக்களுள் சரியான கூற்றுக்களை இனங்காட்டும் எழுத்துக்களாக அமைவது

(1) B,C,D (2) A,B,E (3) C,D,E (4) A,B,D (5) A,C,D (………)

18. முதல்வரின் சார்பாகப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் பொழுது அல்லது விற்பனை செய்யும் பொழுது அக் கொடுக்கல் வாங்கல்களை தனது தனிப்பட்ட பெயரில் மேற்கொள்ளப்படும் முகவரைக் குறிப்பது.
(1) தரகு முகவர்கள்
(2) காரணிகர்கள்
(3) பொறுப்பு முகவர்
(4) ஏல விற்பனையாளர்
(5) தரகர்கள் (………)

19. கீழே பல்வேறு முகாமைத்துவ மட்டங்களுக்குரிய முகாமையாளர்களிடம் இருக்க வேண்டியதும், மேம்படுத்திக் கொள்ள வேண்டியதுமான திறன்களினதும் ஒழுங்கிற்கமைவாக சரியாகக் காட்டப்படுகின்ற முகாமைத்துவத் திறன்களைத் தெரிவு செய்க.
A. ஏதேனும் விசேட துறைக்குரிய ஏதேனும் கருமங்களைச் செய்வதற்கு முகாமையானரொருவரிடம் காணப்பட வேண்டிய சிறப்பறிவு, அனுபவம், ஆற்றல்
B. சிக்கலான சந்தர்ப்பமொன்றில் உருவாகின்ற புதிய கருத்துக்களை பகுப்பாய்வு செய்யும் உளரீதியான ஆற்றல்
(1) தொழில்நுட்பத் திறன், எண்ணக்கருவாக்கத் திறன்
(2) தொழில்நுட்பத்திறன், மானிடத் திறன்
(3) எண்ணக்கருவாக்கத்திறன், மானிடத் திறன்
(4) மானிடத் திறன், எண்ணக்கருவாக்கத் திறன்
(5) மானிடத் திறன், தொழில்நுட்பத்திறன் (………)

20. முகாமைத்துவம் என்ற எண்ணக்கரு பின்வரும் எந்நிறுவனங்களுக்கு இன்றியமையாதது?
(1) இலாப நோக்குள்ள நிறுவனங்கள்
(2) சேவை நோக்குள்ள நிறுவனங்கள்
(3) இலாப நோக்கற்ற நிறுவனங்கள்
(4) சமூக அமைப்புக்கள்
(5) மேற் கூறிய அனைத்தும் (………)

21. தலைமைத்துவம், ஊக்கப்படுத்தல், தொடர்பாடல் என்பன உள்ளடங்கும் முகாமைத்துவக் கருமமாக அமைவது.
(1) திட்டமிடல்
(2) ஒழுங்குபடுத்தல்
(3) நெறிப்படுத்தல்
(4) தீர்மானமெடுத்தல்
(5) மேற்பார்வையிடல் (………)

22. அதிகாரம், பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்படும் முறைகளான மையப்படுத்தல், பன்முகப்படுத்தலின் அனுகூலங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A. மிக விரைவாகத் தீர்மானம் எடுக்க முடிதல்.
B. தரமான தீர்மானங்களை எடுக்க முடிதல்.
C. கீழுள்ள ஊழியர்கள் முன்னேற்றமடைதல்.
D. கட்டுப்பாட்டுக் கருமங்கள் இலகுவாக அமைதல்.
E. குறைந்த கிரயம்.
F. உயர்மட்ட முகாமையின் கருமங்கள் குறைவடைதல்.
G. தொடர்பாடல் இலகுவாக அமைதல்.
மேற்குறித்த விடயங்களுள் மையப்படுத்தலின் அனுகூலங்ளை மட்டும் இனங்காட்டும் எழுத்துக்களாக அமைவது.
(1) A,D,E,G (2) B,C,F,G (3) A,B,C,E (4) B,C,D,E (5) A,D,E,F
(………)

23. கீழே X நிரலில் உற்பத்தி முறைகளும் Y நிரலில் அவற்றிற்கான உதாரணங்களும் தரப்பட்டுள்ளன.

X	Y
1. வேலை உற்பத்தி	A. மணமகன் ஒருவருக்கு முக அலங்காரம் செய்தல்.
2. தொகுதி உற்பத்தி	B. மோட்டார் வாகன உற்பத்தி
3. பாய்ச்சல் உற்பத்தி	C. வெதுப்பக உற்பத்திகள்
	D. பாடசாலை மாணவர்களுக்கு கழுத்துப்பட்டி (Tie) தைத்தல்
	E. குளிர்பான உற்பத்திகள்
	F. பிறந்த நாள் ஒன்றிக்காக மேடை அலங்காரம் செய்தல்

மேலே X, Y நிரலினை இணைக்கும் போது சரியாக அமையும் விடைத் தொகுதியாக அமைவது

(1) 1- C,D 2- B,E 3- A,F

(2) 1- A,E 2- B,F 3- C,D

(3) 1- B,E 2- A,F 3- C,D

(4) 1- A,F 2- C,D 3- B,E

(5) 1- C,D 2- A,E 3- B,F (.........)

24. செயற்பாட்டு முகாமைத்துவத்தில் மொத்த வருமானம், மொத்தக் கிரயத்திற்கு சமமாகக் காணப்படும் நிலையைக் குறிப்பது.

(1) இலாபம்

(2) சமப்பாட்டுப்புள்ளி

(3) விற்பனை அலகுகள்

(4) பொருளாதாரக் கட்டளைக் கணியம்

(5) அலகொன்றின்பங்களிப்பு (.........)

25. சந்தைப்படுத்தல் எண்ணக்கரு ஒன்றாகக் கருதப்பட முடியதது.

(1) உற்பத்தி எண்ணக்கரு

(2) உற்பத்திப் பொருள் எண்ணக்கரு

(3) வழங்குநர் எண்ணக்கரு

(4) சந்தைப்படுத்தல் எண்ணக்கரு

(5) வாடிக்கையாளர் எண்ணக்கரு (.........)

26. குறித்த பொருளை உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்று தனது பொருட்களை உள்ளூர் சந்தையில் காணப்படும் கேள்விகளுக்கேற்ப சந்தைப்படுத்த விரும்புகின்றது இச்சந்தர்ப்பத்தில் குறித்த நிறுவனம் பின்பற்றக் கூடிய மிகவும் பொருத்தமான சந்தைத் துண்டமாக்கல் அணுகுமுறையாகக் கருதப்படக் கூடியது.

(1) புவியியல் (பூகோள) ரீதியான சந்தைத் துண்டமாக்கல் (Geogrophic Segmentation)

(2) சமூக ரீதியாக சந்தைத் துண்டமாக்கல் (Demographic Segmentation)

(3) உளவியல் ரீதியான சந்தைத் துண்டமாக்கல் (Psychological Segmentation)

(4) நடத்தை ரீதியான சந்தைத் துண்டமாக்கல் (Behavioural Segmentation)

(5) மேற்கூறிய எவையுமல்ல (.........)

27. 'அநேகமான மக்களுக்கு BMW காரினை கொள்வனவு செய்ய விருப்பம் உள்ளது. ஆனால் ஒரு சிலரால் மட்டுமே அதனை வாங்க முடிகின்றது இக்கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்படும் சந்தைப்படுத்தலின் மைய எண்ணக்கருவாக (Core Marketing concept) அமைவது

(1) விருப்பம் (Want)

(2) தேவைகள் (Needs)

(3) துண்டமாக்கல் (Segmentation)

(4) போட்டி நிலைமை (Competition)

(5) கேள்வி (Demand) (………)

28. சந்தைப்படுத்தல் கலவை என்பது.

(1) நிறுவனத்திற்கு உள்ளேயும், வெளியேயும் உள்ள அனைத்து வணிகச் சூழல் பற்றிய ஆய்வாகக் காணப்படும்.

(2) ஒரு பொருளை அல்லது சேவையை எவ்வாறு விற்பனை செய்வது தொடர்பான ஆய்வுகளை உள்ளடக்கியதாகக் காணப்படும்.

(3) வணிக நிறுவனமொன்று தனது இலக்கு சந்தையில் சந்தைப்படுத்தல் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக நடைமுறைப்படுத்துகின்ற கருவிகளின் கூட்டாகக் காணப்படும்.

(4) நுகர்வோரின் தேவைகள், விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கு விற்பனைக்காக சந்தைக்கு முன்வைக்கின்ற உற்பத்திப் பொருள் தொடர்பான ஆய்வாகக் காணப்படும்.

(5) ஒரு வணிகத்தின் சந்தைப்படுத்தல் கருமத்தின் பலம், பலவீனம் பற்றிய ஆய்வாகக் காணப்படும். (………)

29. பங்குச் சந்தையில் பரிமாற்றப்படுகின்ற பிணைப்பத்திர முதலீடுகளிலிருந்து கிடைக்கின்ற நேரில் அனுகூலமாக அமைவது.

(1) பங்கு இலாபம்

(2) ஒதுக்கங்களை மூலதனமாக்கல்

(3) உரித்து வழங்கல்/ உரிமை வழங்கல்

(4) மூலதன இலாபம்

(5) உபகார வழங்கலுக்கான உரிமை கிடைத்தல் (………)

30. நிதியீட்டல் வழிமுறைகள் சில கீழே தரப்படுகின்றன.

A. நிறுத்தி வைத்த வருவாய்

B. பங்கு வழங்கல்

C. வங்கிக் கடன்

D. மேலதிக சொத்து விற்பனை

E. குத்தகை

F. தொழிற்படு மூலதனத்தைக் கடுமையாகக் கட்டுப்படுத்தல்

G. வங்கி மேலதிகப்பற்று

மேற்குறிப்பிட்டவற்றுள் உள்ளக நிதியீட்டல் வழிமுறையைக் காட்டும் விடைத் தொகுதியாகக் காணப்படுவது.

(1) A, D, F

(2) B, C, E

(3) C, E, G

(4) B, C, F

(5) D, E, F (………)

- ***31 தொடக்கம் 40 வரையான வினாக்களிலுள்ள இடைவெளியைப் பொருத்தமான சொல்/ சொற்களைப் பயன்படுத்தி நிரப்புக.***

31. (அ) மிகை உற்பத்தியை மற்றோர் மிகை உற்பத்தியுடன் பரிமாற்றம் செய்தல் ………………………………………. முறை என அழைக்கப்படுவதோடு, ……………………………………. விளைவொன்றாக மிகை உற்பத்தி ஏற்பட்டது.

(ஆ) வணிகம் முன்வைக்கின்ற பொருட்கள் அல்லது சேவைகளுக்குச் சமமான உற்பத்திகளை முன்வைக்கின்ற ஏனைய வணிகங்கள் ………………………………………………………… எனப்படுவதோடு, இவை வணிகத்தின் …………………………………………………… சூழல் காரணிக்குள் உள்ளடங்குகின்றது.

32. (அ) பாடசாலை மாணவர்களுக்கான சீருடை மற்றும் பாடப் புத்தகங்கள் வழங்கல் என்பன ……………………………………. இனால் மேற்கொள்ளப்படுவதுடன், பாடசாலைக் கட்டடங்கள் நிர்மாணம், விளையாட்டு உபகரணங்களை பெற்றுக் கொடுத்தல் என்பன உரிய …………………………………… ஊடாக இடம் பெறுகின்றது,

(ஆ) பொருளொன்றின் பொதியிடலில் விலையில் மாற்றம் செய்தல் மற்றும் காலாவதியாகும் திகதி குறிப்பிடாதிருக்கும் போது நுகர்வோரின் (1) ……………………………………………….. (2) ……………………………………………. உரிமைகள் மீறப்பட்டுள்ளமையை அறிய முடியும்.

33. கீழே வணிக அமைப்புக்கள் தொடர்பான சில கூற்றுக்கள் தரப்படுகின்றன. அக் கூற்றுக்களுக்கு பொருத்தமான வணிக அமைப்புக்களின் பெயர்களை இடைவெளியில் குறிப்பிடுக.

A. இலாபம் உழைக்கும் நோக்கத்துடன் வணிகமொன்றை நடாத்திச் செல்லும் தனிநபர்களுக்கிடையே காணப்படும் தொடர்புமுறையிலான வணிகம்……………………………...

B. பங்கு வழங்கல்களை மேற்கொள்ளாது அங்கத்தவர்களின் பொறுப்பு அகவிதிச்சட்டக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள பிணைத் தொகைக்கு வரையறுக்கப்பட்டுள்ள கம்பனி ………………………………...

C. அங்கீகாரம் வழங்குபவரின் பெயரிலும் முறையிலும் வணிகத்தை நடாத்திச் செல்வதற்கு அங்கீகாரம் பெறுபவருக்கு உரிமையினை ஒப்படைக்கின்ற வணிகம்………………………………

D. விசேட அல்லது பொதுச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்படுவதும், சட்ட ரீதியான தனிமனித அந்தஸ்து உள்ளதுமான அரசதுறை வணிகம். ………………………………...

34. (அ) புத்தாக்கம் புனைபவராகவும், இடர்களுக்கு முகம் கொடுப்பவராகவும் ……………………………………….. காணப்படுவதோடு, நடைமுறையில் காணப்படும் கருத்து அல்லது எண்ணக்கருவிற்கமைய வணிகமொன்றை ஆரம்பிப்பவர் ……………………………………….. ஆவார்.

(ஆ) லங்கா செட்டில் முறைமைக்குள் உள்ளடங்கும் இரு முறைகளாவன.

1. ……………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………

35. (அ) வணிக நிறுவனமொன்றில் தொடர்பாடல் இடம்பெறும் முறைமைக்கமைய (1)…………………………………….. (2)………………………. என வகைப்படுத்த முடியும்.

(ஆ) இலங்கை தரக்கட்டளைப் பணியகம் தர உத்தரவாதத்தை மேம்படுத்துவதற்காக மிக அண்மையில் அறிமுகப்படுத்திய தரச் சான்றிதழ் முறைமையாகக் ………………………………… காணப்படுவதோடு ISO 50001 தரச்சான்றிதழ் ………………………… விடயத்திற்காக வழங்கப்படுகின்றது.

36. (அ) முகாமையாளரொரொருவர் ஆளிடைத் (Interpersonal Role) தொடர்பு வகிபாகத்தில் மேலதிகரி மற்றும் (1) ……………………..……………….. (2)………………………………………ஆகிய உப வகிபாகங்களை ஏற்கின்றார்.

(ஆ) ஏதாவது குறித்த பிரச்சினையொன்றைத் தீர்ப்பதற்கு எடுக்க வேண்டிய ………………………………… முறைகளை இனங்கண்டு அவற்றுள் பொருத்தமானதை தெரிவு செய்யும் செயன்முறை …………….………….. ஆகும்.

37. (அ) 1. உற்பத்திப் பொருளொன்றின் நிலைமாற்றல் செயன்முறையில் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது ……………………………. ற்கு பெறுமானமொன்று சேர்க்கப்படுகின்றது.

2. மறுகட்டளை மட்டத்தைக் கணிப்பிடுவதற்கான பின்வரும் சமன்பாட்டினை பூரணப்படுத்துக.

மறுகட்டளை மட்டம் = ………………………x உச்ச கட்டளைக் காலம்.

(ஆ) ……………………………………… ஒன்றில் தரம், வடிவம், பொதியிடல், சின்னம் என்பன உள்ளடங்குவதுடன், ……………………………………… இன் மூலம் வாடிக்கையாளர்களைக் கொள்வனவு செய்வதற்கான தூண்டுதல்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

38. (அ) குறித்த பொருளொன்றைக் கொள்வனவு செய்வதற்காகக் கூடிய முயற்சியொன்று எடுக்கப்படுமாயின் அது …………………………..………………….. பொருளாகக் காணப்படுவதுடன், ஆயுட் காப்புறுதி ஒப்பந்தங்கள், புதிய புத்தகங்கள் என்பன ………………………………..……..……… பொருள் வகையைச் சார்ந்ததாகும்.

(ஆ) 1. உற்பத்திப் பொருள் தொடர்பான குறித்த சில தகவல்களைச் சுட்டிக்காட்டுவதற்காக பொதியின் பகுதியொன்றாக …………………………………. பயன்படுத்தப்படுகின்றது.

2. உற்பத்திப் பொருளொன்றை விரைவாகக் கொள்வனவு செய்வதற்கு நுகர்வோரைத் தூண்டுகின்ற குறுங்கால ஊக்குவிப்பு முறை ……………………………… எனப்படும்.

39. நிதி முகாமைத்துவம் தொடர்பான சில கூற்றுக்கள் கீழே தரப்படுகின்றது. அக் கூற்றுக்களுக்கு பொருத்தமான சொற்பதங்களை இடைவெளியில் குறிப்பிடுக.

1. நிதி முறைமையில் இடம்பெறுகின்ற பிரதானமானதும் முக்கியமானதுமான பணியாக இருப்பது…………………………………………

2. நாடொன்றின் நிதி முறைமையின் ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்பாட்டினையும், வாழ்தன்மையையும் உறுதிப்படுத்துவதற்குத் துணையாக அமைகின்ற கொடுப்பனவு தீர்ப்பனவு முறைகளைக் குறிப்பது……………………………………

3. அரசிற்குத் தேவையான குறுங்காலக் கடனை உள்நாட்டுப் பணவடிவில் பெற்றுக் கொள்வதற்காக மத்திய வங்கியினால் வெளியிடப்படும் நிதிக்கருவி……………………..

4. கம்பனியொன்று முதல் தடவையாகப் பங்குகளை வழங்குவதன் மூலம் பொதுமக்களுக்கு அழைப்புவிடுத்து பங்குச் சந்தையில் பட்டியல்படுத்தப்படுவதைக் குறிப்பது.

…..……………………….

40. (அ) சகல தொழில்களும் பணிகள் (Tasks) மற்றும் (1) ………………………………………………
(2) ……………………………………. என்பவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படும்.

(ஆ) வணிகமொன்றின் உள்ளக ரீதியான வளங்களிலிருந்து ஊழியர்களைப் பெற்றுக் கொள்ளும் போது (1) ……………………………………. (2) …………………………………………..
ஆகிய காரணிகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

- **41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடைகளை தரப்பட்டுள்ள இடைவெளியில் எழுதுக.**

41. பொருளாதார வாழ்தன்மைக்கு வணிகங்களின் பங்களிப்புக்களைக் குறிப்பிடுக.

1) …………………………………………………………………………………………………

2) …………………………………………………………………………………………………

3) …………………………………………………………………………………………………

4) …………………………………………………………………………………………………

42. அரசொன்றின் பொருளாதார நோக்கங்களைக் குறிப்பிடுக.

1) …………………………………………………………………………………………………

2) …………………………………………………………………………………………………

3) …………………………………………………………………………………………………

4) …………………………………………………………………………………………………

43. முயற்சியாண்மைத் திறன்கள் நான்கினைக் குறிப்பிடுக.

1) …………………………………………………………………………………………………

2) …………………………………………………………………………………………………

3) …………………………………………………………………………………………………

4) …………………………………………………………………………………………………

44. கூட்டுறவு கிராமிய வங்கிகளின் கருமங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

1) …………………………………………………………………………………………………

2) …………………………………………………………………………………………………

3) …………………………………………………………………………………………………

4) …………………………………………………………………………………………………

45. காப்புறுதி செய்ய முடியாத இடர்களுக்கு உதாரணம் நான்கு தருக.

1) …………………………………………………………………………………………………

2) …………………………………………………………………………………………………

3) …………………………………………………………………………………………………

4) …………………………………………………………………………………………………

46. கட்டுப்பாட்டுச் செயன்முறையின் படிமுறைகளை ஒழுங்கு முறையாகத் தருக.

1) ……………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………

3) ……………………………………………………………………………………………

4) ……………………………………………………………………………………………

47. தொழிற்சாலை தள அமைப்புத் திட்டமொன்றின் நான்கு வகைகளையும் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………

3) ……………………………………………………………………………………………

4) ……………………………………………………………………………………………

48. நுகர்வோர் சந்தைத் துண்டமாக்கலுக்குப் பயன்படுத்தப்படும் அடிப்படைகள் நான்கினையும் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………

3) ……………………………………………………………………………………………

4) ……………………………………………………………………………………………

49. சந்தைப்படுத்தல் கலவையானது வாடிக்கையாளர் கோணத்தில் முன்வைக்கப்படும் முறைகள் நான்கினையும் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………

3) ……………………………………………………………………………………………

4) ……………………………………………………………………………………………

50. இலத்திரனியல் வணிகம், கணினி வலையமைப்பில் பயன்படுத்தப்படும் பின்வரும் ஒவ்வொரு குறியீடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் கருத்தினை எழுதுக.

1) ……………………………………………………………………

2) ……………………………………………………………………

3) ……………………………………………………………………

4) ……………………………………………………………………

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022
Conducted by Field Work Centre, Thondaimanaru
5th Term Examination - 2022

FWC

வணிகக்கல்வி - II Business Studies - II	Three Hours and ten minutes Gr. 13 (2022)	32	T	II

❖ **வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.**

அறிவுறுத்தல்கள் :-

❖ **ஒவ்வொரு பகுதியிலிருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

பகுதி I

01. தற்போது எமது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக எதிர் காலத்தில் பல சாதகமற்ற நிலைமைகள் ஏற்படும் என பல பொருளியல் ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இவற்றினைக் கருத்தில் கொண்ட பூஞ்சோலை கிராமத்தில் வசிக்கும் ஞானேந்திரன் என்ற வணிகக்கல்வி பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் தனது ஐந்து ஏக்கர் நிலப்பரப்பையும் முழுமையாகப் பயன்படுத்தி மரக்கறிப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வருகின்றார். மேலும் தனது பயிர்செய்கைக்குத் தேவையான பசளையைத் தானே தயாரித்து பயன்படுத்தியதுடன் மேலதிக பசளையினை கிராமத்திலுள்ள ஏனைய விவசாயிகளுக்கு தனது மரக்கறிகள் விற்பனை நிலையத்தினூடாக நியாய விலையில் விற்பனை செய்து வருகின்றார். தனது தோட்ட வேலைகளை விஸ்தரிக்கும் நோக்குடன் தனது கிராமத்தில் தரிசாக கிடைக்கும் விளை நிலங்களை குத்தகைக்குப் பெற்றிருந்தார். தனது சேமிப்பினைப் பயன்படுத்தி நவீனரக விவசாய உபகரணங்களை கொள்வனவு செய்தனுடன் விற்பனை நிலையத்திற்கும், தோட்ட வேலைகள் செய்வதற்குமென ஊழியர்களை புதிதாக வேலைக்கமர்த்தியிருந்தார். எனினும் விவசாயத்திற்குத் தேவையான உள்ளீடுகளை பெறுவதில் சிரமத்தை எதிர் கொள்கின்றார்.

i) அ) ஞானேந்திரன் வணிகச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார் என ஏற்றுக் கொள்வதற்கு அவரின் வணிகத்தில் காணப்படும் பண்புகள் நான்கு தருக.

ஆ) மேலுள்ள விடய ஆய்வில் உள்ளடங்கியுள்ள இரண்டு பிரதான அடிப்படை வணிகச் செயற்பாடுகளைக் குறிப்பிடுக.

ii) அ) மேற்படி விடய ஆய்விலிருந்து பின்வரும் உற்பத்திக் காரணிகள்/ உள்ளீடுகளுக்கு உதாரணம் தருக.

a) நிலம்
b) உழைப்பு
c) மூலதனம்
d) முயற்சி

ஆ) ஞானேந்திரன் வணிகத்தில் காணப்படும் உள்ளக, வெளியகச் சூழல் காரணிகளுக்கு இவ்விரண்டு உதாரணம் தருக.

iii) அ) 1. மேற்படி வணிகத்தினால் நிறைவேற்றப்படும் இரண்டு சமூக ரீதியான பொறுப்புக்களைக் குறிப்பிடுக.

2. குறிப்பிட்ட வணிகத்தில் அக்கறை செலுத்தும் தரப்பினர்கள் இருவரைக் குறிப்பிடுக.

ஆ) மேற்படி வணிகத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய வணிகக் கருமங்கள் நான்கினை ஒவ்வோர் உதாரணம் மூலம் குறிப்பிடுக.

iv) அ) 'ஞானேந்திரன் பொருள் மற்றும் சேவை உற்பத்தி வணிகச் செயற்பாட்டில் ஈடுபடுகின்றார்' இக் கூற்றினை ஏற்றுக் கொள்கின்றீரா? உமது கருத்திற்கு காரணம் தருக.

ஆ) நிலைபேறான சூழலின் அபிவிருத்திக்கு ஞானேந்திரன் எனும் வணிகர் பங்களிப்புச் செய்யக் கூடிய வழிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

v) அரசின் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஞானேந்திரன் பங்களிப்புச் செய்யும் இரண்டு முறைகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(5x4=20 புள்ளிகள்)

02. பெண்களுக்கான சிகையலங்காரத் துறையில் நிபுணத்துவம் பெற்ற மாயா என்பவர் பெண்களுக்கான அழகுக்கலை பாடநெறியினை முடித்த தனது நண்பியான ரம்யாவினை இணைத்து வணிகம் ஒன்றினை நடாத்தி வருகின்றார். இவ்விருவரும் ஒத்துழைப்பு, ஒருமைப்பாடு, அர்ப்பணிப்புடன் செயலாற்றியதுடன், வணிகத்தை எவ்வித கருத்து முரண்பாடின்றி நடாத்திச் சென்றமையால் நாளுக்கு நாள் வணிகம் விருத்தியடைந்தது.

மேலதிகமான நிதித்தேவை காரணமாக மாயா தனது பெயரில் வங்கிக்கடன் ஒன்றை பெற்றிருந்ததுடன், ரம்யாவின் பெயரில் சிறிய ரக மோட்டார் வாகனம் ஒன்றை கொள்வனவு செய்திருந்தனர்.

இருவரும் தமது வணிகத்திலிருந்து சம்பளம் பெறாதவர்களாக செயற்பட்டதுடன், இலாப நட்டங்களை சமமாக பகிர்ந்து கொண்டனர். எதிர்பாராத விதமாக விபத்தொன்றில் மாயா அங்கவீனமடைத்ததால் வணிக நடவடிக்கைகளில் செயற்பட முடியாமல் போனதுடன், வங்கிக் கடனை திருப்பிச் செலுத்த முடியாததன் காரணத்தால் தனது சொந்தச் சொத்துக்களையும் இழக்க வேண்டியிருந்தது. இருவரும் கலந்தாலோசித்து தமது வணிகம் எதிர்கொண்ட பிரச்சினைகளை கருத்தில் கொண்டு அவற்றை தவிர்க்கும் முகமாக வேறொரு புதியதொரு வணிகமொன்றை மீள ஆரம்பிக்கத் தீர்மானித்தனர்.

i) அ) மேலே தரப்பட்டுள்ள சம்பவத்தின் அடிப்படையில் இனங் காணப்படும் வணிக அமைப்பு வகை யாது?

ஆ) நீர் மேலே குறிப்பிடும் வணிக அமைப்பினை உரிமை, நோக்க அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுக.

ii) அ) மேலே மாயா, ரம்யா இருவரும் தமது சொந்த பெயர்களில் வங்கிக் கடனைப் பெறுவதற்கும், மோட்டார் வாகனத்தை கொள்வனவு செய்வதற்கும் காரணமாக அமைந்த விடயம் யாது?

ஆ) மாயா, ரம்யா வணிகத்தில் இனங் காணக் கூடிய பண்புகள் நான்கு தருக.

iii) அ) மாயா, ரம்யா ஆகிய இருவரும் சம்பளம் பெறாமை இலாப/ நட்டம் சமனாக பகிரல் என்ற அடிப்படையில் நோக்கும் போது குறித்த வணிகத்தை எச் சட்டத்தை பின்பற்றி ஆரம்பித்திருப்பார்கள் என நீர் கருதுகின்றீர்?

ஆ) மேலே சம்பவத்தில் குறிப்பிட்ட விடயங்களைத் தவிர குறித்த சட்டத்தில் குறிப்பிடப்படும் வேறு விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

iv) அ) மாயா வங்கி கடனைப் பெறுவதற்கு யாது செய்திருக்க வேண்டும்?

ஆ) மாயா, ரம்யா இருவரும் குறித்த வணிகத்தை தொடர்ந்து நடாத்துவதில் எதிர்கொண்ட பிரச்சினைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

v) அ) மாயா, ரம்யா இருவரும் மீள ஆரம்பிப்பதற்கு பொருத்தமான வணிக அமைப்பு எதுவென நீர் கருதுகின்றீர்?

ஆ) மேலே நீங்கள் குறிப்பிடும் வணிகத்தின் பண்புகள் மூன்று தருக.

(5x4=20 புள்ளிகள்)

03. i) 'தற்போது எமது நாட்டில் இடம் பெற்றுவரும் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வாக முயற்சியாளர் மற்றும் முயற்சியாண்மையின் முக்கியத்துவம் தற்போது உணரப்பட்டு வருகின்றது' இக் கூற்றுக்கு சார்பான வாதங்கள் நான்கினை முன் வைக்குக.

ii) அ) சுயாதீனமான உரிமையும் மற்றும் சுயாதீனமாகச் செயற்படுகின்றதும், அதே போன்று குறிப்பிட்ட துறையில் அதிகாரமற்ற வணிகங்கள் சிறிய வணிகமென வரைவிலக்கணப்படுத்திய நிறுவனம் எது?

ஆ) சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகங்கள் தோல்வியடைவதற்கான காரணங்கள் நான்கு தருக.

iii) அ) அலகுப் பொறுப்பொன்றில் உள்ளடக்கப்படும் பிரிவினரைக் குறிப்பிடுக.

ஆ) ஒப்புறுதியாளர் என்பதனால் கருதப்படுவது யாது?

iv) அ) காசோலையொன்றில் புறக் குறிப்பிடல் தேவைப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.

ஆ) இலத்திரனியல் பணத்தினூடாகக் கொடுக்கல், வாங்கல்களைத் தீர்க்கும் போது தொடர்புபடும் தரப்பினர்களைக் குறிப்பிடுக.

v) அ) 'காப்புறுதியில் பண ரீதியாக அளவிடக் கூடிய இழப்பொன்று ஏற்படக் கூடிய சந்தர்ப்பம் இடர் ஆகும்' காப்புறுதி செய்யக் கூடிய இடரொன்றில் காணப்பட வேண்டிய பண்புகள் நான்கு தருக.

ஆ) வணிக நடவடிக்கைகளுக்கு தொடர்பாடலின் முக்கியத்துவம் நான்கு தருக.

(5x4=20 புள்ளிகள்)

04. i) அ) தற்போதைய சூழலில் இலங்கையில் போக்குவரத்தின் அடிப்படை அம்சங்களில் எவற்றினை பெறுவது மிகவும் கடினமான விடயமொன்றாக மாறி வருகின்றது என நீர் கருதுபவற்றைக் குறிப்பிட்டு விளக்குக.

ஆ) பொருத்தமான போக்குவரத்து ஊடகமொன்றைத் தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கு தருக.

ii) அ) 'களஞ்சியப்படுத்தல்' (Warehouing) என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ) நிறுவனங்களின் தன்மை, உற்பத்திகளின் தன்மை, என்பவற்றிற்கமைய போக்குவரத்தும், மற்றும் அமையவியல் சேவை முறைமை காணப்படுகின்றது. அவ்வாறான முறைமைகள் நான்கினைக் குறிப்பிடுக.

iii) அ) வியாபாரத்தில் இடை நடுவர்களைப் பயன்படுத்துவதன் மூலம் பெறப்படும் அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) விற்பனையகங்களற்ற சில்லறை வியாபாரங்கள் (Non store Retailing) இடம் பெறும் முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

iv) அ) வெளிநாட்டு வியாபாரத்திற்கு அடிப்படையாக அமைந்த காரணிகள் நான்கு தருக.

ஆ) சர்வதேச வர்த்தகத்தில் தீர்வை வரி அறவீடுகளுக்கு மேலதிகமாக சுதந்திர வர்த்தகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஏனைய தடைகள் நான்கின் பெயர்களைத் தருக.

v) அ) சர்வதேச வியாபாரத்தில் காணப்படும் வியாபார ஒப்பந்தங்களுக்கு இரண்டு உதாரணம் தருக.

ஆ) இலத்திரனியல் வணிகத்தையும், இலத்திரனியல் வர்த்தகத்தையும் வேறுபடுத்துக.

(5x4=20 புள்ளிகள்)

05. i) "ஏதேனும் சரியான கருமமொன்றினை செய்வதைப் போன்றே கருமமொன்றைச் சரியாகச் செய்வதைத் தீர்மானிக்க வேண்டியது முகாமைத்துவத்தில் மிக முக்கியத்துவமுடையதாகும்" தெளிவுபடுத்துக. *(04 புள்ளிகள்)*

ii) திட்டமிடலின் போது "பபவாஅ" (SWOT) பகுப்பாய்வு செய்வதினூடாக எதிர்கால இலக்கினை அடைந்து கொள்வது இலகுவாக்கப்படும் விபரிக்குக. *(04 புள்ளிகள்)*

ii) அ) அமைப்பு வரைபடம் (Organigation chart) என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ) தலைவரின் நடத்தைப் பாங்கிற்கேற்ப தலைமைத்துவத்தின் இரண்டு வகைகளையும் குறிப்பிடுக.

iv) அ) ஊழியர்களை வேலைக்குத் தூண்டச் செய்வதற்கு வணிகமொன்றினால் பின்பற்றப்படும் நிதிசார் ஊக்குவிப்பு முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) கட்டுப்படுத்தல் செயன்முறைக்கென பயன்படுத்தப்படும் நுட்ப முறைகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றிற்கு உதாரணங்கள் ஒவ்வொன்று தருக.

v) அ) 'நிகழ்ச்சி முகாமைத்துவம்' (Event manngement) கற்ற சாய்ராம் வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க, அவர்களின் தேவைக்கேற்ப நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்துக் கொடுத்தனுடன், அவற்றிற்குத் தேவையான மேடை அலங்கரிப்பினையும் மேற்கொள்கின்றார். இங்கு சாய்ராம் பின்பற்றுகின்ற உற்பத்தி முறையினைக் குறிப்பிட்டு அம் முறையின் பண்புகள் மூன்று தருக.

ஆ) "பொருளொன்றின் தரம் பல உறுப்புக்களின் சேர்க்கையைக் கொண்டதாகும்" அதில் உள்ளடங்கும் உறுப்புக்கள்/ கூறுகள் நான்கினைக் குறிப்பிடுக.

06. i) அ) சமப்பாட்டு புள்ளிப்பகுப்பாய்வின் வரையறைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

ஆ) ஆடை உற்பத்தி நிறுவனமொன்று கொள்வனவு செய்யும் பொருட்கள், சேவைகளுக்கு இவ்விரண்டு உதாரணம் தருக.

ii) அ) 1. வெதுப்பக உற்பத்தி நிறுவனமொன்று சிறந்த இருப்பு மட்டங்களைப் பேணுவதற்கு யாது செய்தல் வேண்டும்?

2. குறித்த நிறுவனம் இருப்பு மட்டங்களைக் கணிக்கும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் மூன்று தருக.

ஆ) பொருளாதாரக் கட்டளைத் தொகையினை (EOQ) கணிப்பிடுவதற்கான வரைபடம் கீழே தரப்பட்டுள்ளது. அவற்றுள் ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்படும் எழுத்துக்களுக்கான சொற்பதங்களைக் குறிப்பிடுக.



(A) ……………………………………..

(B) ……………………………………..

(C) ……………………………………..

(D) ……………………………………..

iii) அ) 1. உற்பத்தித் திறன் என்பதனால் கருதப்படுவது யாது?

2. உற்பத்தித் திறன் வணிகத்திற்கு முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் இரண்டு தருக.

ஆ) வணிகமொன்று தனது உற்பத்திச் செயன்முறையில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதிலுள்ள பிரச்சினைகள் நான்கு தருக.

iv) அ) கமலி என்பவர் பிரபல பாடசாலைக்கண்மையில் உடன் பழக்கலவை குடிபானங்களை (Fresh juice) தயாரித்து தனது இலக்கு சந்தையின் தேவைகள் விருப்பங்களை இனங்கண்டு அதற்குரிய பழக்கலவை பானங்களை தயாரித்து விற்பனையை அதிகரிப்பதற்கான முயற்சியில் ஈடுபடுகின்றார்

a) கமலி பின்பற்றும் சந்தைப்படுத்தல் எண்ணக்கரு யாது என நீர் கருதுகின்றீர்?

b) கமலி வாடிக்கையாளர் எண்ணக்கருவினைப் பின்பற்ற வேண்டுமெனின் யாது செய்தல் வேண்டும்?

ஆ) ‘உற்பத்திப் பொருட்கலவை’ என்பதனால் கருதப்படுவது யாது? எனக் குறிப்பிட்டு அதற்குள் உள்ளடங்கும் விடயங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

v) அ) பொருளொன்றின் வாழ்க்கைச் சுற்றோட்டமானது சில கருதுகோள்களின் அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அவ்வாறான கருதுகோள்கள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) a. இலங்கையில் வணிகங்கள் தமது சின்னத்தினை எச் சட்டத்தின் கீழ், பதிவு செய்தல் வேண்டும்?

b. விலையானது பல்வேறு பெயர்கள் கொண்டு அழைக்கப்படுவதுண்டு. அவ்வாறான பெயர்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

07. i) அ) பொருத்தமான விநியோக வழிமுறையொன்றினைத் தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) மேம்படுத்தல் கலவையில் காணப்படும் மேம்படுத்தல் முறைகள் தொடர்பான உதாரணங்கள் சில கீழே தரப்படுகின்றது. அவற்றிற்குப் பொருத்தமான மேம்படுத்தல் முறைகளைக் குறிப்பிடுக.

a) மீன்பிடித் தொழிலாளரொருவர் துவிச்சக்கர வண்டியைப் பயன்படுத்தி கடல் மீன்களை விற்பனை செய்தல்

b) வங்கியொன்று முதியோருக்கான புதிய சேமிப்பு வைப்புக் கணக்கு முறையொன்றினை தொலைக்காட்சி ஊடகத்தின் மூலம் அறிமுகப்படுத்தல்

c) டெங்கு ஒழிப்புத் தொடர்பில் மக்களுக்கு அறியச் செய்வதற்காக வீதி நாடகமொன்றினை நடத்துதல்

d) புதுவருடத்தை முன்னிட்டு சிறப்புச் சந்தையொன்றில் விற்பனையை அதிகரிப்பதற்காக கழிவு முறையொன்றை அறிமுகப்படுத்தல்

ii) பின்வரும் மையச் சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்களை விளக்குக.

1. பெறுமதியும் (Value), திருப்தியும் (Satisfaction)

2. பரிமாற்றமும் (Excharge), கொடுக்கல் வாங்கல்களும் (Transaction) *(04 புள்ளிகள்)*

iii) *அ)* 'பொருளொன்று அல்லது சேவையொன்று தொடர்பாக நுகர்வோரின் மனதில் சாதகமான மனப்பாங்கினை கட்டியெழுப்புதல் சந்தை இட நிலைப்படுத்தல் (Market Positioning) எனப்படும்'. சந்தையில் நிலைத்திருக்கக் கூடிய முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

ஆ) சிறந்த பொதியிடலொன்றைத் திட்டமிடும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் நான்கு தருக.

iv) *அ)* நிதி முகாமைத்துவத்தின் நான்கு முக்கிய நோக்கங்களைக் குறிப்பிடுக.

ஆ) மூலதனப் பாதீடு என்பதனால் கருதப்படுவது யாது?

v) மல்லிகா என்பவர் தானியங்களை அரைத்து மாவாக்கி அவற்றை பொதி செய்து விநியோகிக்கின்ற வணிகமொன்றைத் தொடங்கத் திட்டமிடுகின்றார். அவரது நீண்டகால மற்றும் குறுங்கால நிதித் தேவைப்பாடுகள் ஒவ்வொன்றுக்கும் இரண்டு உதாரணங்கள் வீதம் தருக.

08. i) *அ)* நீண்டகால முதலீட்டுத் தீர்மானம் (மூலதன முதலீட்டுத் தீர்மானம்) நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) நிறுவனமொன்று நிதியினை நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களில் முதலீடு செய்யும் பொழுது கருத்திற் கொள்ளப்படும் விடயங்கள் நான்கு தருக.

ii) *அ)* பின்வரும் இலாப விகிதங்களை கணிப்பிடுவதன் பயன்களைக் குறிப்பிடுக.

1. மொத்த இலாப விகிதம் (Gross profit Ratio)

2. தேறிய இலாப விகிதம் (Net profit Ratio)

ஆ) இலங்கையில் நிதிச் சந்தையில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற நிதிக் கருவிகள் நான்கின் பெயர்களைத் தருக.

iii) இலங்கையின் நிதிச் சந்தைக் கட்டமைப்பினை பாய்ச்சல் கோட்டு வரைபடம் மூலம் வகைப்படுத்திக் காட்டுக.

iv) *அ)* ஏனைய வளங்களுடன் ஒப்பிடும் போது மனித வளங்களின் விசேட பண்புகள் நான்கு தருக.

ஆ) வேலை குறித்துரைத்தல் (Job Discription) என்பதனால் கருதப்படுவது யாது?

v) *அ)* வேலை விபரணம் (Job specification) வேலை குறித்துரைத்தலுக்கும் (Job discription) இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக.

ஆ) மனித வள மிகை காணப்படும் போது நிறுவனமொன்று மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிடுக.